# தமிழ் மக்களின் குலதெய்வ வழிபாடுகள்

சுந்தரி பாலசுப்ரமணியம்
நூலக அதிகாரி
லீ கொங் சியன் மேற்கோள் நூலகம்
தேசிய நூலகம்

by SUNDARI BALASUBRAMANIAM
Librarian
Lee Kong Chian Reference Library,
National Library

நாட்டுப்புற மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்தது தெய்வ வழிபாடாகும். இத்தெய்வ வழிபாட்டின் தோற்றம் பழமையுடையது. உணவைமட்டுமே தேடிக் கொண்டிருந்தவன் இயற்கையின் மாற்றங்களையும் சீற்றங்களையும் கண்டு அஞ்சி இயற்கையைவழிபட ஆரம்பித்தான்.மனிதன்நாடோடி நிலையை விடுத்துச் சமுதாயம் என்னும் அமைப்பில் வாழ்க்கையை சீர்திருத்திக் கொண்டபோது, நிலையான வழிபாட்டையும் ஏற்படுத்திக்கொண்டான். குழுவாக வாழத் தொடங்கியதும் தங்களுக்குள் பல பிரிவுகளை உருவாக்கிக் கொண்டனர். ஒவ்வொரு பிரிவினரும் தாங்கள் வாழும் நிலத்திற்கேற்ப தங்கள் வழிபாடுகளையும் அமைத்துக்கொண்டனர். பிறகுத் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளத் தனது சந்ததியினரை உருவாக்கிய அக்குடியின் முன்னோர்களையும் தெய்வமாக வழிபட ஆரம்பித்தனர்.

நாட்டுப்புற வழிபாட்டு முறை அச்சத்தின் விளைவாகத் தோன்றி வளர்ந்தது என்பதற்குச் சான்றாக வழிபாட்டில் உள்ள சிறுதெய்வக் கோயில்களைக் கூறலாம். பிடாரி, அய்யனார், காளி, கருப்பர், முனீஸ்வரன் போன்ற தெய்வங்களின் உருவங்களும், அவர்களுக்கான வழிபாட்டு முறைகளும் அச்சம் கொள்ளும் வகையில் விளங்குகின்றன. இக்கோயில்கள் உள்ள பகுதிக்கு உச்சி வேளைகளில், இரவு வேளைகளில் செல்லக்கூடாது, சென்றால் தெய்வம் துன்புறுத்தும் என்னும் கருத்து மக்களிடையே நிலவிவருகிறது.

நாட்டுபுற வழிபாடுகளில் ஒன்றே குலதெய்வ வழிபாடு. இது எல்லாச் சமூகத்திலும் காணப்படுகிறது. ஒரு குலத்திற்குரிய தெய்வம் குலதெய்வம் என வழங்கப்படுகிறது. சிறு குழுக்கள் வழிபடும் தெய்வமாகக் குலதெய்வம் இருக்கிறது. இக்குழுக்கள் திருமண பந்தத்தாலும் உறவு முறையாலும் பிணைக்கப்பட்டு இருக்கும். குலதெய்வங்கள் சாதி அமைப்புகளுடனும் உறவுமுறை குலங்களுடனும் மிக நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளன. இக்குடிகள் எங்கு சென்றாலும் அவர்களின் குலதெய்வ வழிபாட்டு சடங்குகளைக் கடைபிடித்து வருவர். ஆண் தெய்வங்கள் அவர்கள் குடும்பத்தில் இறந்த முன்னோராகவோ, போரில் வீர மரணம் அடைந்தவராகவோ, தம் மக்களைக் காப்பாற்றக் கள்வர்களுடன் போரிட்டு இறந்தவராகவோ இருக்கலாம். பெண் தெய்வங்கள் பொதுவாக, வன்முறைக்குப் பலியாகி மாண்ட அல்லது தன் மானம் காக்கத் தன்னையே மாய்த்துக்கொண்ட பெண்ணாகவோ, கணவன் இறந்ததும் உடன்கட்டையேறியப் பெண்ணாகவோ, அல்லது கன்னிகழியாத, சிறுவயதில் மாண்ட பெண்ணாகவோ இருக்கலாம். இதைத் தவிர சிறு தெய்வங்களையும் குலதெய்வமாக வழிபடுவர். ஒவ்வொரு குலதெய்வத்திற்குப் பின்னும் ஒரு மரபுக் கதையோ அல்லது புராணத் தொடர்புடையோ கதையோ விளங்கும். இக்கோயில்களில் காவல் தெய்வங்களான கறுப்பர், ஐய்யனார் அல்லது முனியாண்டி ஆகியோரின் சிலைகள் இருக்கும்.

குலதெய்வ வழிபாடு பாரம்பரியமாக அவரவர் குடும்பங்களில் பாட்டனார், முப்பாட்டனார் வழியில் வரும் ஒரு வழக்கமாகும். ஒவ்வொரு ஆண்டும் அக்குலத்தைச் சேர்ந்த உற்றார் உறவினர் யாவரும் ஒன்று கூடி பொங்கல் வைத்து மாவிளக்கேற்றி



கௌரிவல்லபர் குதிரையில்



குதிரையின் முன்னங்கால்களைத் தாங்கியபடி அவர் நேசித்தப் பெண்



வல்லபரின் வேலையாள்



சுற்றிலும் அழகிய சிற்பங்கள்



.பூதகணங்கள் தாங்கிய குதிரை

வழிபாடு நடத்துவர். இதைத் தவிர விசேட மாதங்களான, தை, மாசி, பங்குனி, ஆடி, போன்ற மாதங்களில் திருவிழாவாகாவும் கொண்டாடுவர். அவரவர் சக்திக்கேற்ப நன்கொடை செலுத்திச் சிறப்பாக இவ்வைபவத்தை நடத்துவர்.

## குல தெய்வங்களில் சில
## கௌரிவல்லபர்

சிவங்கை மாவட்டத்தில் உள்ள படமாத்த்தூர் எனும் கிராமத்தில் உள்ளது இவர் கோயில். வேலுநாச்சியார், முத்துவடுகநாதத் தேவர் அவர்களின் சுவீகாரப் புத்திரன் தான் கௌரிவல்லபர். இவருக்குப் பின்னணியில் உள்ள கதை மிக சுவாரசியமானதாகும். கி.பி. 1801 ஆம் ஆண்டு சோழபுரம் ஜமீந்தாரக இருந்துவந்தார். வல்லபர் தினமும் வேட்டைக்குச் செல்கையில் முக்குலத்தோர் இனப் பெண் ஒருத்தியை விரும்பி அவளை சந்திக்க அடிக்கடி காட்டிற்கு வருவார். இதை விரும்பாத அப்பெண்ணின் உறவினர்கள் அவரைக் கொல்ல சதித்திட்டம் தீட்டினர். அப்பெண்ணுடன் தப்பியோடும் போது உறவினர் வீசிய கத்தியால் மடிந்தார். அப்பெண்ணும் அவரின் அந்தரங்க வேலையாளும் தங்களை மாய்த்துக்கொண்டனர்.

மற்றொரு கதையில் அப்பெண் வல்லபரிடம் சதியைக் கூறச் செல்கையில் அவர் குதிரையுடன் எதிரில் வர அக்குதிரையைத் தன் தோள்மேல் தாங்கி மேலே செல்லக் கூடாது என கெஞ்சுகிறாள். எதிரில் வந்த குதிரையைத் தாங்கிப் பிடித்தபடி சிலையானதாகக் கூறுகின்றனர்.

இக்கோயிலில் வல்லபர் குதிரை மீது அமர்ந்தவாறு இருக்கிறார். குதிரையின் முன்னங்கால்களைத் தாங்கிப் பிடித்தவாறு அப்பெண் நிற்கிறாள். பெரிய குதிரையில் வீற்றிருக்கும் ஐய்யனார் சிலையும் உள்ளது. அதைத் தாங்கியபடி பூத கணங்கள் நிற்கின்றன.

## எல்லம்மாள்

அருப்புக்கோட்டை மாவட்டத்தில், கல்லூரணி என்ற கிராமத்தில் உள்ள ஒரு சாதியினர் வணங்கும் தெய்வம் எல்லம்மாள். இத்தெய்வத்தின் பின் உள்ள கதை மகாபாரதத்தின் கிளைக் கதைகளுள் ஒன்றான பரசுராமர் கதையைச் சார்ந்தது. பரசுராமர், தந்தை கூறியதால் தன் தாய்



எல்லம்மாள்



கருப்பர்



சின்னழகு, பெரியழகு

ரேணுகா தேவியின் தலையைக் கொய்தான். அந்த ரேணுகா தேவியை எல்லம்மாள் என்றும் அழைப்பர். இக்கோயிலில் அவர் தலை மட்டும் வைத்து வணங்கப்படுகிறது. வெள்ளி, செவ்வாய், மாசி மாதம் மற்றும் விசேட நாட்களில் அக்குலத்தைச் சேர்ந்தவர்கள் வழிபாடுசெய்கின்றனர். இக்கோயிலில் கருப்பர் அல்லது கருப்புச் சாமி காவல் தெய்வமாக நிற்கிறார்.



நாக வழிபாடு செய்யும் பெண்கள்
All rights reserved, Tamil Murasu, 2008

## சின்னழகு, பெரியழகு

இதே ஊரில் உள்ள மற்றக் குலதெய்வங்களான சின்னழகும் பெரியழகும் தீயில் மாண்டதாக மரபுக் கதை நிலவுகிறது. இக்கோயிலுக்கு மேற்கூரைக் கிடையாது. வெட்டவெளியிலுள்ள ஒரு மேடையில் இவ்விருவருடைய சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. முன்பு இக்கோயில்கள் மேற்கூரையோடு இருந்ததாகவும் பிறகு ஒருநாள் திடீரென்று தீப்பற்றி எரிந்துபோனதாகவும் கூறினர். ஊரார் ஒருவரின் கனவில் இவ்விரு தெய்வங்களும் வந்து தாங்கள் தீயில் எரிந்ததால் எப்பொழுதும் சூரியக் கதிரின் வெப்பத்தில் இருக்கவே விரும்புவதாகக் கூறியதையொட்டி வெட்டவெளியில் வைத்துவிட்டதாக அக்கிராமத்தார் கூறுகின்றனர். இவர்கள் பீடத்திற்கு முன்பு கருப்பர் சாமியும் வீற்றிருக்கிறார்

## கண்ணகி

தமிழகத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள சிறுவாச்சூர் என்னும் கிராமத்தில் மதுர காளியம்மன் கோயில் உள்ளது. இது மதுரையை எரித்தக் கண்ணகியின் கோயில் என தல வரலாறு கூறுகிறது. மதுரையை எரித்துக் கோபத்தோடு வந்த கண்ணகி இங்கு வந்து சாந்தமடைந்ததாகக் கூறுவர். இத்தெய்வமும் பலருக்குக் குலதெய்வமாக விளங்குகிறது.

## சூளைக்கருப்பனார்

இத்தெய்வம் ஒரு சமூகத்தாரால் குலதெய்வமாக வணங்கப்படுகிறது. தாங்கள் செய்த மண்பாண்டங்களைச் சூளையிடும் போது அப்பாண்டங்கள் நன்றாக வேகவும் எவ்விதத் தீங்கும் நேராமல் இருப்பதற்கும் சூளைக்கருப்பனாரை வழிபடுகின்றனர்.

## நாக தெய்வம்

இந்தியாவில் பல மாநிலங்களில் நாகர் வழிபாடு தொன்றுதொட்டு இருந்து வருகிறது. நல்ல பாம்பைத் தங்கள் குலதெய்வமாக வழிபடுகிறனர். இதற்கும் ஒரு மரபுக் கதை உள்ளது. விவசாயி ஒருவன் தன் வயலில் விளையாடிக்கொண்டிருந்த நல்ல பாம்புகள் எல்லாவற்றையும் கொன்றுவிட்டான். அதனால் கடுங்கோபம் கொண்ட பாம்புகள் அந்த விவசாயி குடும்பத்தையே அழித்துவிட்டன. ஆனால் ஒரேயொரு பெண்ணை மட்டும் ஒன்றும் செய்யவில்லை. அவள் நல்ல பாம்பைத் தன் குலதெய்வமாக வழிபட்டு வந்ததே காரணமென்றுத் தெரியவந்தது. பெண்கள் மட்டுமே செய்யும் இவ்வழிபாட்டினால் கணவன் ஆயுள் நீடிக்குமென்றும், எல்லா நன்மைகளும் கிடைக்கப்பெறும் என்றும் நம்புகின்றனர்.

## சிங்கை முனீஸ்வரன்

சிங்கையில் உள்ள தமிழ் மக்கள் தங்கள் குலதெய்வங்களாக அம்மன், மாரியம்மன், பெரியாச்சீ, காளியம்மன், மதுரைவீரன், ஐய்யனார் போறோரை வழிபடுகின்றனர். புலம்பெயர்ந்து சென்று வேற்றூரில் காலூன்றி வாழும் மக்கள் தங்கள் குலதெய்வம் அறியாமல் போனால் தங்களுக்கு விருப்பமான கடவுளை குலதெய்வமாகக் கொள்கின்றனர். அவ்வாறே முருகன், சிவன், திருமால் போன்ற கடவுளர்களைச் சில சமூகங்கள் வழிபட்டு வருகின்றனர்.
இன்றும் பல குடும்பங்கள் இங்கு வாழ்ந்தாலும் தமிழ்நாட்டில் உள்ள தங்கள் கிராமங்களில் உள்ள குலதெய்வ வழிபாட்டிற்கும், அங்கு கோயில் கட்டவும், சீரமைப்புப் பணிகளுக்காவும் பொருளுதவி செய்கின்றனர். பண்டிகை நாட்களிலும், வீட்டு விசேட நாட்களிலும் இக்குலதெய்வத்திற்கு வீட்டில் படையல் வைத்து வழிபடுகின்றனர்.

சிங்கை மக்களின் அன்புக்குரிய தெய்வங்களில் ஒருவர் முனீஸ்வரர். தமிழர்கள் இங்கு வந்த காலம் தொட்டு முனீஸ்வர வழிபாடு இருந்து வருகிறது. இவரைத் தங்கள் வீட்டுப் பெரியவராகவே கருதி ‘அய்யா’, என்றே அழைக்கின்றனர். விழாக்காலங்களிலும், வீட்டு விசேட நாட்களிலும் இவருக்கே முதல் மரியாதையாக பூசை செய்கின்றனர். சிங்கையில் உள்ள முனீஸ்வர ஆலயங்கள் பின்வருவன.

- தரும முனீஸ்வரர் ஆலயம்
- ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயம்
- அருள்மிகு வேல்முருகன் ஞான முனீஸ்வரர் ஆலயம்.


இக்கோயில்கள் தவிர மற்ற கோயில்களிலும் முனீஸ்வரர் வழிபாடு நடந்துவருகிறது.
முனீஸ்வரர் சிவனின் அவதாரமாகவே கருதப்படுகிறார். அதனால் அவருக்குப் படைக்கும் உணவு சைவ உணவாகும். ஆனால் காவல் தெய்வங்களாகப் பல பெயர்களில் மக்களிடையே வலம் வருகிறார். முனியாண்டி, ஜடா முனி, தர்மமுனி, வாள் முனி, ஞான முனி, பாண்டி முனி போன்ற பெயரில் காவல்

தெய்வங்களாகவும் பல வீடுகளில் குலதெய்வங்களாகவும் கருதப்படுகிறார்.

## வழிபடும் முறைகள்

மலேசியாவில் இன்றும் தோட்டங்களில் வழிபாடு செய்யும் மக்கள் தாங்களே அபிசேகம்,பூசைசெய்துவழிபடுகின்றனர். கோயில்களில் உள்ள தெய்வங்களுக்குத் தனியாக ஆகம முறைப்படி பூசை செய்யப்ப்படுகிறது. ‘சாமியாடுதல்’ இவர்கள் வழிபாட்டில் ஒரு முக்கிய பங்காற்றுகிறது. ‘அய்யா’ பக்தர் மேல் இறங்கி அவர் மூலம் அருள்வாக்குக் கூறுவதாக நம்பிக்கை. இது இன்றும் முனியாண்டியைக் குலதெய்வமாக வழிபடும்பலவீடுகளில்நடத்தப்படுகிறது. அம்மனுக்கு எடுப்பது போல் தீச்சட்டி எடுப்பதும், சாட்டையால் தங்களை அடித்துக்கொள்வதும் வழிபாடுகளாகப் பின்பற்றப்படுகின்றன. படையலில் சைவம் அல்லது மதுவும், அசைவ உணவும் படைக்கப்படுகின்றன.

பக்தி மக்களின் வாழ்க்கையில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. இதில் இறைபக்தி என்பது கடவுள் என ஒரு சக்தியை மக்கள் வணங்குவதாகும். தங்கள் சமுதாயத்தில் பிறந்து நன்மை செய்து மறைந்த வீரர்களையும், பெரியோர்களையும் வணங்குவது குலதெய்வவழிபாடாகும்.எதுவானாலும், மனிதன் தன் ஆசை, கனவுகள் யாவையும் நிறைவேற்றி வைக்கும் சக்தியாகக் கடவுளைப் பார்க்கிறான். பயபக்தியுடன் வழிபட்டு நம்பிக்கையோடு தன் கடமையைச் செய்கிறான். அவன் நம்பிக்கையின் தூண்டுகோலாக, துக்கங்களின் வடிகாலாக இறைவன் தன் பங்கைச் செயலாற்றுகிறான். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதே நம் குலதெய்வ வழிபாட்டின் தத்துவமாக விளங்குகிறது.





வீட்டில் வணங்கும் முனீஸ்வரன்
**All rights reserved, Singapore University Press, 2005**

**SUMMARY**
The concept of “kula deivam” is central to theistic Hinduism. Many households across the Indian landscape recognise a particular deity as a family or clan deity. This deity protects the home and all its members. The deity is treated like a family member. In many cases an ancestor may be deified after several generations thus assuming the status of a kula deivam. In this article a few of the various forms of family deities are discussed. In addition, it also briefly explores the worship of ‘Muneeswaran’ by many Singaporeans.

### ஆதாரக் குறிப்புகள்

1. Sinha, Vineeta. (2005). A new God in the Diaspora. Singapore: Singapore University Press.
   RSING 294.5095957 SIN
2. அரசு, வீ., பார்த்திபராஜா, கி. (Eds). (2002).
   நாட்டார் சாமிகள். சென்னை: தன்னனானே பதிப்பகம்.
   R 294.5211 NAA
3. காந்தி, க. (2003). தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும். சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
   R 954.82 GAN
4. சண்முகம், ஆ. (Eds). (2003).
   பண்பாட்டுத் தளங்கள். சென்னை: அகல்.
   R 398.2095482 PAN
5. கதிர் முருகு. (2007). நாட்டுப்புற வழிபாட்டில் தொன்மங்கள். சென்னை: நாம் தமிழர் பதிப்பகம்.
   R 894.8114 KAT
6. ரவீந்திரன் நாயர், ஜி. (1999). இந்தியாவில் நாக வழிபாடு. புது தில்லி: இயக்குனர், பப்ளிகேஷன்ஸ் டிவிஷன், தகவல் ஒலிபரப்பு அமைச்சகம்.
   R 294.543 RAV



காட்டில் வணங்கும் முனீஸ்வரன்
**All rights reserved, Singapore University Press, 2005**

